மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண்.6/2019

நீ.ம.சா.1

பெயர் : உமா

தேதி :20.03.2025

வயது :

த/பெ :

கிராமம் :

தொழில் :

மாவட்டம்:

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 20ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராகவும் மற்றும் ஆவண ஆய்வு நிபுணராகவும் பணிபுரிந்து வருகிறேன். எங்களது அலுவலகத்தில் கடந்த 24.2.2022 அன்று மாவட்ட உரிமையியல் நீதிபதி ஸ்ரீவைகுண்டம் அவர்களின் கடித எண். 279/2021 நாள் 06.09.2021 மூலம் ஐ.ஏ.எண்.1/2020 இன் அசல் வழக்கு எண்.6/2019 வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்ற ஆணையர் திரு. பாலசுப்பிரமணியன் என்பவர் மூலம் பெறப்பட்டு அவற்றை கவனமுடன் பரிசீலனை செய்து நானும் எனது துணை இயக்குநரும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அவற்றுக்கு கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்பட்டது.

27.05.1993 தேதியிட்ட ஆவண எண்.4109/1993 உடைய கிரையபத்திரத்தில் காணப்பட்ட சந்தேக நபரான அ.கா.காதர் முகைதீன் என்பவரால் போடப்பட்டதாக கூறப்படும் சர்ச்சைக்குரிய தமிழ் கையொப்பங்களானது Q1 முதல் Q9 வரை குறியீடு செய்யப்பட்டது.

ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களான 06.03.1990 தேதியிட்ட ஆவண எண்.265/1990 எண் கொண்ட கிரைய பத்திரத்தில் அ.கா.காதர் முகைதீன் கையெழுத்து என்று ஒத்துக்கொள்ளப்பட்டதாக கூறப்படும் தமிழ் கையொப்பங்களுக்கு A1 முதல் A9 வரை குறியீடு செய்யப்பட்டது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2025.03.20 05:35:13 +0530

மேற்கண்டவாறு குறியீடு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய மற்றும் ஒத்துக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை புகைப்படம் எடுத்து Hand lence மற்றும் நவீன கருவிகளின் உதவியுடன் மிகவும் கவனமாக ஆய்வு செய்து கீழ்க்காணும் முடிவுக்கு வரப்பட்டது.

A1 முதல் A9 வரை குறியீடு செய்யப்பட்டு சிவப்பு மையினால் அடைப்பு செய்யப்பட்ட ஒத்துக்கொள்ளப்பட்ட கையொப்பங்களானது அ.கா.காதர்முகைதீன் என்ற தமிழ் கையொப்பங்களை கையெழுத்திட்டவரும் Q1 முதல் Q9 வரை குறியீடு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய கையொப்பத்தை கையெழுத்திட்டவரும் ஒரே நபர் தான் என்று கருத்துரை வழங்கியுள்ளேன். இக்கருத்திற்கான காரணத்தை காரணத்தாளில் விரிவாக கூறியுள்ளோம். மேற்கண்ட ஆய்வு முடிவினையும் முடிவுக்கான காரணங்களையும் ஆவண ஆய்வு எண்.34/2022 நாள் 24.2.2023 அன்று ஆவண ஆய்வு அறிக்கை தயார் செய்து ஆவணங்களையும் ஆய்வறிக்கையும் மாவட்ட உரிமையியல் நீதிபதி ஸ்ரீவைகுண்டம் அவர்களுக்கு நீதிமன்ற ஆணையர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. **என்னிடம் காண்பிக்கப்படுவது 24.2.2023 தேதியிட்ட ஆவண ஆய்வறிக்கை என்றால் சரிதான். அது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணைக்கு தயார் ஆகாததால் குறுக்குவிசாரணை முடித்துவைக்கப்படுகிறது. )

S MUTHU LAKSHMI
Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2025.03.20 05:35:20 +0530